


# உலகத் தமிழர்களின் சாபக்கேடு

*மனித உரிமைகளை உயர்த்திப் பிடிக்கவேண்டுமாயின், அடிப்படையான மனிதகுல நீதிகளை ஆதரிக்க வேண்டுமாயின் உங்கள் பக்கமுள்ளவர்களுக்கு மட்டும் அதைக் கேட்காதீர்கள். அனைவருக்கும் அந்த உரிமைகளைக் கேளுங்கள். நமது கலாசாரம், நமது தேசம் இவை காட்டுகின்ற விஷயங்கள் மட்டுமே சரியானவையாக இருக்குமென நினைப்பது தவறு.*

*- எட்வர்ட் ஸெய்தி -*

# எதிரொலி

ETHIROLI - March-April 2008    பங்குனி சித்திரை - 2008
ஒலி - 01    அதிர்வு - 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழருக்கே உலை வைத்துவிட்ட 'உலகத் தமிழர் இயக்கம்'

**2006** ஏப்ரலில் கனேடிய பொலீசாரின் முற்றுகைக்கு உள்ளான உலகத் தமிழர் இயக்கத்தின் காரியாலயங்கள் கடந்த ஏப்ரல் மாதம் 12ம் 13ம் திகதிகளில் முழுமையாக சீல் வைக்கப்பட்டுவிட்டன. கடந்த 2006ம் ஆண்டில் ரொறன்ரோ மொன்றியல் ஆகிய இடங்களில் அமைந்திருந்த உலகத் தமிழர் இயக்க காரியாலயங்கள் RCMP யின் விசேட பிரிவினரால் சுற்றி வளைக்கப்பட்ட செய்தியை கனடா வாழ் தமிழர்கள் பலரும் மறந்தே போயிருந்தனர். அது ஒன்றும் பெரிய விடயமல்ல எனத் தோன்றுகின்ற வகையில், கனடா வாழ் புலிகள் உலகத் தமிழர் பத்திரிகையையும் அச்சடித்து விநியோகித்து வந்தனர்.

ஆனால் கனேடியப் பொலீசாரோ உலகத் தமிழர் இயக்க காரியாலயங்களில் இருந்து ஆயிரக்கணக்கான ஆவணங்கள், மற்றும் கணனிகள் என்பவற்றை கொண்டு சென்றிருந்தனர். உலகத் தமிழர் இயக்க காரியாலயத்திலிருந்து கைப்பற்றிய ஆவணங்களை துருவித் துருவி ஆராய்ந்த கனேடியப் பொலீசார் அங்கிருந்த பலரின் பெயர் விபரங்கள், வங்கிக் கணக்கு விபரங்கள் உட்பட பல பயனுள்ள தகவல்களை பெற்றுக்கொண்டனர். அவற்றை வைத்தே சிலரைத் தொடர்ந்து கண்காணிக்கத் தொடங்கினர். தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றனர் அந்த வகையில் அகப்பட்டவர்தான் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் தம்பித்துரை பிரபாகரன் என்பவர்.



தம்பித்துரை பிரபாகரன்

**நேரு குணரட்ணம் மற்றும் சித்தா சிற்றம்பலம் போன்ற உலகத் தமிழ் இயக்கப் பிரமுகர்கள் இப்போது எங்கே என்றே தெரியவில்லை. முன்னர் கனேடியத் தமிழ் மக்களிடம் பெரும் சவடால் விட்டுத் திரிந்தவர்கள் தற்போது தப்பித் தவறிக்கூட கனேடிய பத்திரிகைகளில் அறிக்கை விடுவதில்லை.**

புலிகளுக்காக உலகத் தமிழர் இயக்கத்தின் சார்பில் பணம் சேகரித்துள்ளதாகவே அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் 10 முதல் 14 வருட சிறைத் தண்டனையை இவர் அனுபவிக்க வேண்டி வரும்.

அவர் பொலீசாரிடம் உண்மையை ஒத்துக் கொண்டுள்ளதோடு தனக்கும் உலகத் தமிழர் இயக்கத்திற்கும் இருந்த நெருங்கிய உறவையும் அம்பலப்படுத்தியுள்ளதாகவே அவரது நெருக்கமான நண்பர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் உலகத் தமிழர் இயக்கமோ வழமை போலவே தமக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று முழுப் பூசனிக்காயை சோற்றில் புதைக்க முயன்றுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில தம்பித்துரை கைது செய்யப்பட்டதற்கும் தொடர்ந்து ஏப்ரல் மாதத்தில் உலகத் தமிழர் இயக்க காரியாலயங்கள் சீல் வைக்கப்பட்டதற்கும் தொடர் பிருப்பதாகவே கனேடிய பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 2006ல் உலகத் தமிழர் இயக்கத்தின் காரியாலயங்கள் சுற்றி வளைக்கப்பட்டு ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டாலும் இரண்டு வருடகாலமாக இந்தக்காரியாலயங்கள் சீல் வைக்கப்படாமல் விட்டு வைக்கப்பட்டிருந்தன.

தற்போது தம்பித்துரை பிரபாகரன் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ள நிலையில் பொலிசாருக்கு உலகத் தமிழர் இயக்கத்தின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு போதுமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றே தகவல்கள் கூறுகின்றன. அவ் ஆதாரங்கள் பலவற்றை பொலீசார் தம்பித்துரையின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இருந்தே பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதுவரை காலம் உலகத் தமிழர் இயக்கத்தோடு மிக நெருக்கமாக பணியாற்றிய பலர் தற்போது அந்தப் பக்கமே தலை வைத்துப் படுப்பதில்லை. 'உலகத் தமிழர் இயக்கமா? அப்படியென்றால் என்ன?' எனக் கேட்கும் நிலையில் இந்தப் போர்வழிகள் சென்றுள்ளனர். இத்தனை காலம் அவர்களுக்காக பணம் சேர்ப்பது உட்பட பல வேலைகளில் ஈடுபட்டவர்கள் கையும் களவுமாக பிடிபட்டவுடன் அவர்களைக் கைகழுவி விடுவதுதான் இந்த புலிகளின் பினாமி அமைப்புக்களின் வேலை என்பதை கனேடிய புலி வாலுகள் தற்போது புரிந்து வருகின்றனர்.

இதற்கு முன்னரும் புலிகளுக்கு ஆயுதம் வாங்குவது மற்றும் பல்வேறு வகையில் இரகசியமான முறையில் உதவிகளைச் செய்ததான குற்றச் சாட்டுகளின் பேரில் கனடாவிலும் அமெரிக்காவிலும் பல்கலைக்கழக மாணவாகள் உட்பட பலர் கைது செய்யப்பட்டபோது கனேடியத் தமிழ் காங்கிரஸ் தமக்கு அப்படி யாரையும் தெரியாது எனக் கைகழுவி விட்டு நழுவியமை பலரும் அறிந்ததே.

இந்த முறை 'உலகத் தமிழரின்' அவலம் யாதெனில், உலகத் தமிழர் இகக்கத்தின் முன்னாள் இன்னாள் பிரமுகர்கள் எவருமே கனேடியப் பத்திரிகையாளர்களுடன் ஒரு வார்த்தைகூட பேசுவதற்கு திராணி இல்லாது இருப்பதேயாகும். பத்திரிகையாளர் எதைக்கேட்டாலும் எல்லாவற்றுக்கும் தமது வக்கீலிடமே கேட்டுக்கொள்ளுங்கள் எனப் பதில்கூறி நழுவுகின்ற நிலைக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் இயக்கம் தொடர்பாக கனேடிய பாதுகாப்பு பிரிவுகளான RCMP மற்றும் CSIS ஆகியவற்றினால் விடுக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் பல செய்திகளை தொடர்ந்து வெளியிட்டமைக்காக National Post பத்திரிகை மீது மானநட்ட வழக்குப் போடப் போவதாக 2000ம் ஆண்டில் மிரட்டிய நேரு குணரட்ணம் மற்றும் சித்தா சிற்றம்பலம் போன்ற உலகத் தமிழர் இயள்ள பிரமுகர்கள் இப்போது எங்கே என்றே தெரியவில்லை. முன்னர் கனேடியத் தமிழ் மக்களிட்ம பெரும் சவடால் விட்டுத் திரிந்து தமது பெயர்கள் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் வரவேண்டும் என அலைந்தவர்கள் தற்போது தப்பித் தவறிக்கூட தமது பெயர்கள் பத்திரிகைகளில் வந்துவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கின்றனர். காரணம் நாளை 'நாங்களும் கனேடிய மண்ணில் கம்பி எண்ண வேண்டி வரலாம்' என்கின்ற பீதி இவர்களை தற்போது பிடித்து ஆட்டுகின்றது.

கடந்த காலங்களில் இவர்கள் செய்ததெல்லாம் என்ன? இலங்கையில் நிகழும் அரசியலின் முழுத் தாற்பரியத்தையும் அறியாத கனேடிய தமிழ் இளம் சமுதாயத்தை கண்மூடித்தனமாக புலி அரசியலை ஆதரிக்க வைத்ததுதான். புலிகளினால் தமிழ் மக்களுக்கு விடிவு வரப்போவிதல்லை என்பதை தாம் நன்கு உணர்ந்திருந்தும் இளம் சந்ததியினரை செம்மறியாடுகள் போல் வழி நடாத்தி தாங்கள் பிரமுகர்களாகத் திரிந்தனர். தற்போது சகலதும் அம்பலப்பட்ட நிலையில் தாங்கள் தப்பித்துக்கொள்ள முயலுகின்றனர்.

**உலகெங்கும் வாழும் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் புலிகளே எனக் கூறும் உலகத் தமிழர் இயக்கத் தலைமையும், இதே போன்ற கருத்துக்களைப் தினமும் பரப்பித் திரிபவர்களும், புலிகளின் ஆதரவில் சில்லறைத் தனமான செல்வாக்குத் தேடித் திரிபவர்களும் புலிகள் உலக ரீதியல் அம்பலப்பட்டு அடி வாங்குகையில் புலிகளுக்காக காவடி எடுத்தவர்களும் அடிவாங்கியே தீரவேண்டும்**

உலகத் தமிழினத்துக்கான தலைவனாக ஒரு கொலை வெறிபிடித்த பாசிச மனநோயாளியை இவர்கள் காண்பிக்க முனைந்தனர். அந்த மன நோயாளியின் பிறந்த நாளையொட்டி நடாத்தப்படும் மாவீரர் தினத்தை தமிழர்களின் விடுமுறை தினமாக கனடாவில் காண்பிக்க முனைந்தனர். அந்த பாசிச இயக்கத்தின் கொடியை தமிழினத்தின் தேசியக் கொடியாக காண்பிக்க முயற்சிகளை மேற்கொண்டனர்.

கனடாவில் இருக்கும் லிபரல் ஜனநாயகச் சூழலைப் பாவித்து தமக்கு சாதகமான சகலதையும் செய்துகொண்ட இவர்கள், இந்த கனேடிய ஜனநாயக சூழலை தமிழ் மக்கள் பூரணமாக அனுபவிப்தைக்கூட அநுமதிக்காத ஒரு கூட்டமாகவே செயற்பட்டு வந்துள்ளனர். கனடாவில் சுதந்திரமான எந்த ஒரு தமிழ் ஊடகமும் வெளிவராமல் அவர்கள் தடுத்துள்ளனர். இலங்கையில் செய்யும் அனைத்து அடாவடித்தனங்களான உடல் ரீதியாக தாக்குதல், அச்சுறுத்தல், கப்பம் வாங்குதல் போன்ற சகலவற்றையும் அவர்கள் கனடாவில் செய்துவருகின்றனர்.

ஆனால் அவர்களின் சகல திட்டங்களும் படிப்படியாக சரிந்து வருவதையே தற்போதைய நிலைமை காண்பிக்கின்றது. தற்போது இவர்கள் பணம் வாங்கச் சென்றால் மக்கள் உடனடியாக பொலீசாருக்கு தகவல் கொடுக்கத் துணிந்துள்ளனர். இவர்கள் வந்து பணம் தரும்படி கேட்பதை பதிவு செய்வதற்கான ஒலிப்திவுக் கருவிகள், கமராக்கள் என்பவற்றை மக்கள் சில இடங்களில் தயாராக வைத்துள்ளனர். இத்தகைய ஆதாரங்கள் தற்போது கனேடியப் பொலீசாரிடம் கையளிக்கப்படுகின்றன.

கனேடியப் பொலீசார் மிக மெதுவாக, ஆனால் படிப்படியாக ஆதாரங்களை சேகரித்து வருவது தற்போது தெரியவந்துள்ளது. காரணம் கனடாவில் இப்படியான கிரிமினல் செயற்பாடுகளைத் தடுக்கப்போகும்போது இது ஒரு இனத்துக்கு எதிரான செயற்பாடாக காண்பிக்க முனைவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே உறுதியான ஆதாரங்களை முழுமையாக சேகரிக்கிறார்கள்.

தற்போது கனடாவில் வாழும் பலருக்கு தாங்கள் துணிந்து புலிகளுக்கு எதிராகச் செயற்படலாம் என்னும் நம்பிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. காரணம் இலங்கையில் கிழக்கு மாகாணத்திலும் வடக்கே யாழ்ப்பாணத்திலும் புலிகளால் பாரிய அளவில் எதுவும் செய்ய முடியாது என்னும் நம்பிக்கை அதிகரித்து வருகின்றது. இலங்கையில் தமிழ் மக்கள் புலிகள் இல்லாத ஒரு அரசியல் சூழ் நிலைக்குத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருப்பதும் இந்த நம்பிக்கைக்கு மற்றுமொரு முக்கிய காரணமாகும்.

கனடாவில் மட்டுமல்லாது அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் தற்போது புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. கனடாவிலும் ஐரோப்பாவில் சில நாடுகளிலும் சில இடங்களில் அரசியல் வாதிகள் வோட்டுகளுக்காக புலிகள் பற்றி கடுமையாகப் பேசாவிட்டாலும் அந்தந்த நாட்டு அரச இயந்திரங்கள் குறிப்பாக பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் அவை புலிகள் இயக்கத்தையும் அதன் செயற்பாடுகளையும் ஒரு பிரச்சினையாகவே காண்கின்றன.

ஆனால், உலகெங்கும் வாழும் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் புலிகளே எனக்கூறும் உலகத் தமிழர் இயக்கத் தலைமையும், இதே போன்ற கருத்துக்களைப் தினமும் பரப்பித் திரிபவர்களும், புலிகளின் ஆதரவில் சில்லறைத் தனமான செல்வாக்குத் தேடித் திரிபவர்களும் தெளிவாக ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது புலிகள் உலக ரீதியல் அம்பலப்பட்டு அடி வாங்குகையில் புலிகளுக்காக காவடி எடுத்தவர்களும் அடிவாங்கியே தீரவேண்டும் என்பது தவிர்க்க முடியாதது. தமிழர்தான் புலிகள், புலிகள்தான் தமிழர் என்றால் புலிகள் மீதான குற்றச்சாட்டுகள் தமிழர் மீதும் விழும் என்பது தவிர்க்க முடியாதது.


இந்தச் சாபக்கேட்டில் இருந்து மீழுவதற்கு தமிழ் சமூகத்திற்கு உள்ளது ஒரே வழிதான். தமிழ் மக்கள் புலிகளை விட்டு ஒதுங்கி ஆக்க பூர்வமான சமூக அரசியல் செயற்பாடுகளின் மூலம் தமது பணிகளை முன்கொண்டு செல்வதுதான்.

**கிரேஸ் சிவலோகன் -கனடா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுமாரன் காட்டிய தற்கொலைப் பாதை

பொன்னுத்துரை சிவகுமாரன் என்ற உரும்பிராயைச் சேர்ந்த யாழ் இந்துக் கல்லூரி முன்னாள் மாணவன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக பல தமிழ் தேசியவாதக் குழுக்களால் பார்க்கப்பட்டு வருகின்றார். பொலிசாரின் சுற்றி வளைப்பின் போது அவர்களின் கைகளில் அகப்படாமல் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டதால் அவருக்கு இந்த முதல் மரியாதை. ஆனாலும் அவர் செய்த தியாகம் வீரத் தனமானதா அல்லது கோழைத் தனமானதா என்ற ஆய்வை இன்றைய இளம் தமிழ் சந்ததியினர் செய்வது தமது கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொள்ள பயன்படக்கூடும்.



ஒருவகையில் பார்க்கப்போனால் சிவகுமாரனின் மரணத்தை தியாகம் என்பதைவிட பலிக்கடா மரணம் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். ஏனெனில் 1970 பொதுத் தேர்தலைத் தொடர்ந்து தமிழ் அரசியலில் ஒரு குழப்ப நிலையும் ஜனநாயக விரோதப் போக்கும் தலைதூக்க ஆரம்பித்தது. அதற்குக் காரணம் இத் தேர்தலில் அ. அமிர்தலிங்கம் உட்பட பல தமிழ் அரசியல் தலைவர்களை தமிழ் மக்கள் தோற்கடித்திருந்தனர். இதனால் விரக்தியடைந்த அவர்கள் குறுக்கு வழியில் இழந்துபோன அதிகாரத்தை பிடிப்பதற்காக இனவாத விஷத்தை தமிழ் இளைஞர்களின் நெஞ்சங்களில் ஊட்ட ஆரம்பித்தனர்.

இந்த இனவாத தீக்கு பலியானவர்களில் முதன்மையானவர் சிவகுமாரன். தலைவர்கள் ஆவேச உருவேற்றிவிட அவர் பல வழிதவறிய நடவடிக்கைகளில் இறங்கினார். யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வைத்து யாழ் மாநகரசபை முதல்வர் அல்பிரட் துரையப்பாவின் காருக்குக் குண்டு வீசினார். யாழ் கோவில் வீதியில் வைத்து யாழ் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகராவின் வாகனத்துக்கு குண்டு வீசினார். உரும்பிராய் சந்தியில் வைத்து கலாச்சார அமைச்சர் சோமவீர சந்திரசிறீயின் காருக்கு குண்டு வீசினார். அவை எல்லாமே இலக்கு தவறிவிட்டன.



கடைசியாக வங்கிக் கொள்ளை ஒன்றில் ஈடுபட்டபோது பொலிசாரால் துரத்தப்பட்டு தப்பியோட முடியாத நிலையில் புகையிலைத் தோட்டம் ஒன்றுக்குள் புகுந்து நஞ்சு அருந்தி தற்கொலை செய்து கொண்டார். அந்த இளைஞனின் இந்த தவறான பாதையை சுட்டிக்காட்டி திருத்துவதற்கு பதிலாக தமிழ் தலைவர்கள் அவரது தற்கொலையை வீரம் என வர்ணித்து அதை முன்மாதிரியாக்கினர். தமிழீழ இலட்சியத்துக்கான முதலாவது பலிக்கடா அன்று கோழைத்தனமான முறையில் பலியிடப்பட்டது என்றே இதனைக் கூறலாம்.. இன்று அதையே புலிகள் இராணுவத்திடம் அகப்படும் போது சயனைட் குப்பியைக் கடித்துவிட்டு வீரத்தியாகம் என்கின்றனர்.

எதிரியின் கைகளில் அகப்படுவதற்கு பயப்படும் ஒருவன், அவனது சித்திரவதைகளுக்கு அஞ்சும் ஒருவன், தற்கொலை செய்துவிட்டு தியாகி என்று போற்றப்படுவதும் மாவீரன் பட்டம் பெறுவதும் தமிழர்களின் பண்டைய வீர வரலாறுகளில் என்றாவது நடந்ததுண்டா? என்றொரு கேள்வியை நாம் இங்கு கேட்கலாம்.

போர் களங்களில் புறுமுதுகு காட்டாமல் எமது பண்டைய மன்னர்கள் போரிட்டதாகவே நாம் வரலாற்றில் படித்துள்ளோம். தமிழினத்தின் பண்டைய வரலாற்றைப் புதுப்பிக்கப் போவதாக சூளுரைத்து போருக்குப் புறப்பட்ட நவீன சேர, சோழ, பாண்டியர்களான புலிகள் எதிரிக்குப் பயந்து தற்கொலை செய்வதை வீரம் என்கின்றனர். என்னே புதிய கண்டுபிடிப்பு!

உலகில் எத்தனையோ மாபெரும் புரட்சியாளர்கள் தோன்றியிருக்கின்றனர். அந்த மாபெரும் புரட்சியாளர்களில் லெனின், ஸ்டாலின், மாஓ, ஹோசிமின், பிடல் கஸ்ட்ரோ, சேகுவேரா போன்ற பலர் எதிரிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு கொடும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்ட போதும் நிலை குலையாது தமது புரட்சிப் பயணத்தைத் தொடர்ந்துள்ளனர்.

எமது அண்டை நாடான இந்தியாவில் கூட சுதந்திரப் போராட்ட காலத்தில் காந்தி, நேரு போன்ற எத்தனையோ தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எல்லோரும் புலிகள் செய்வது போல தற்கொலை செய்திருந்தால் இந்த புகழ் பூத்த தலைவர்களின் வழிகாட்டல் மக்களுக்கு கிடைத்திருக்க வாய்ப்பிருந்திருக்க முடியுமா?

எனவே சிவகுமாரனின் மரணம் என்பது பின் பற்றக்கூடிய ஒரு தியாக மரணமல்ல. அது வழிதவறிய ஒரு அப்பாவி இளைஞனின் சோக முடிவு. ஆனால் அவரது மரணத்திற்கு சூத்திரதாரிகளான தமிழ் தலைவர்கள் அவரது துக்கரமான முடிவுடன் தமது அழிவு அரசியலை நிறுத்தவில்லை. மேலும் மேலும் அதை ஊக்குவித்தனர். அதனால் இன்று நாம் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்களை அநியாயமாகப் பலியிட்டு நிற்கின்றோம்.

**செழியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் புலித் தலைமையின் இரத்த தாகம் அடங்கவில்லை. வீடு வீடாக சின்னஞ் சிறார்களை கொலைக் களத்திற்கு இழுத்தச் சென்றவண்ணம் உள்ளனர்.அன்றும் சிவகுமாரனின் தவறான பாதையை விமர்சித்தவர்கள், சுட்டிக்காட்டியவர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்களது சொல் ஏற்கப்படவில்லை.

அவ்வாறானவர்களில் துணிந்து பகிரங்கமாக தமது கருத்தை மக்கள் மத்தியில் சொன்ன இருவரைக் குறிப்பிடலாம். ஒருவர் முன்னை நாள் பருத்தித்துறை நகரசபைத் தலைவரும் தமிழ் காங்கிரஸ் பிரமுகரமான கே. நடராசா. சிவகுமாரன் மரணித்து அந்த மரணத்தை அரசியல் ஆதாயம் பெறுவதற்காக தமிழ் தலைவர்கள் பெரும் சடங்காக நடாத்திக் கொண்டிருந்த வேளையில் நடராசா யாழ் மாநாகரசபை மைதானத்தில் பகிரங்க பொதுக் கூட்டம் ஒன்றில் பேசினார்.

அந்தக் கூட்டத்தில் பேசிய நடராசா 'இன்று தமிழ் இளைஞன் ஒருவனின் மரணத்தை சில அரசியல்வாதிகள் பெரும் சடங்காக நடாத்துகின்றனர். சிலர் என்னையும் பார்த்து அந்த மரணச் சடங்கில் கலந்து கொள்ளவில்லையா எனக் கேட்கின்றனர். அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். அதாவது நான் எனது வாழ்க்கையில் ஒரு போதும் தற்கொலை செய்து கொண்டவர்களின் மரணச் சடங்கிற்கு சென்றது கிடையாது. ஏனெனில் தற்கொலை செய்து கொள்பவர்கள் வாழ்க்கையின் சவால்களுக்கு முகம் கொடுக்க திராணியற்றவர்கள், கோழைகள்' என்று கூறினார். என்னே அர்த்தமுள்ள பேச்சு!

இதேபோல சிவகுமாரன் மரணித்த நாட்களில் கூட்டம் ஒன்றில் பேசிய மார்க்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான வி.ஏ. கந்தசாமி, 'சிவகுமாரன் என்ற ஒரு தமிழ் இளைஞன் தனது உயிரை தானே மாய்த்துக் கொண்டுள்ளார். இந்த மரணம் ஒரு பின்பற்றக்கூடிய உதாரணம் என்று சில அரசியல் தலைவர்கள் கூறிவருகின்றனர். அது தவறு. அவரது தற்கொலை மரணம் கூறும் செய்தி என்னவெனில், தமிழ் தலைமைகள் தற்பொழுது தமிழ் மக்களுக்கு காட்டுகின்ற பாதை தற்கொலைப் பாதை என்பதே. இது வருங்காலத்தில் ஏற்படப் போகின்ற அழிவுக்கு முற்கட்டியம் கூறுகின்றது' என்றார். எவ்வளவு தீர்க்கதரிசனமான வார்த்தைகள்!

இன்று புலிகள் நடாத்துகின்ற யுத்தம் தமிழ் மக்களை முற்று முழுதான தற்கொலைப் பாதையில், அழிவுப் பாதையில் இட்டுச் செல்வதை யாராவது இதய சுத்தியுடன் மறுத்துரைக்க முடியுமா? அன்று இந்த இரு தலைவர்களும் மனதில் பட்டதை பேசக்கூடிய குறைந்த பட்ச ஜனநாயகச் சூழலாவது இருந்தது. ஆளால் இன்று ?..?..?

ஒன்றை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவது அவசியம். சிவகுமாரனின் மரணத்தை நினைவுகூரும் போது அந்த அநியாய மரணத்துக்காக வருத்தப்படுங்கள். ஆனால் அதை பின்பற்றக் கூடியதான ஆதர்சமாக்காதீர்கள். அவனது மரணம் வழங்கிய எதிர்மறை படிப்பினைகளை தற்கொலைப் பாதையில் விரைகின்ற தமிழினத்துக்கு உணர்த்துங்கள்!.

■


மைலாய் படுகொலைகள் நினைவுச் சின்னம்

## MYLAI படுகொலையின் சோக நினைவலைகள்.

வியட்நாம் யுத்த காலத்தில் அமெரிக்க இராணுவம் நடாத்திய 'மைலாய்' (MYLAI) படுகொலைகளின் 40வது ஆண்டு தினம் அண்மையில் நினைவு கூரப்பட்டது. 1968ம் ஆண்டு மார்ச் 16ம் திகதி மத்திய வியட்நாமில் இருந்த மைலாய் கிராமத்தில் பிரவேசித்த அமெரிக்க இராணுவத்தின் Charlie Company படைப்பிரிவு அக்கிரமத்திலிருந்த சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 504 மக்களை கொன்று குவித்தது.

அமெரிக்க ஆக்கிரமிப்பு இராணுவத்தை எதிர்த்துப் போரிட்ட வியட்நாம் தேசிய விடுதலை முன்னணியின் 'வியட்கொங்' (VIET CONG) கொரில்லாக்களுக்கு அக்கிராம மக்கள் உதவி வருகிறார்கள் என்று குற்றம் சாட்டியே அமெரிக்கர்கள் இப்படுகொலையைச் செய்தனர்.

ஆனால் வியட்நாம் யுத்தத்தின் போது 20 இலட்சம் மக்கள் வரை பலியாக நேரிட்டபோதும் அந்நாட்டு மக்கள் உறுதியுடன் போராடி இறுதியாக 1975ல் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மைலாய் படுகொலை நடந்த சமயத்தில் அச்சம்பவம் உலகையே உலுக்கியது. உலகம் முழுவதும் அமெரிக்க இராணுவத்தின் மிலேச்சத்தனமான செயலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இலங்கை மக்களும் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்ற பேதமின்றி கண்டனம் தெரிவித்தனர். ஆனால் மைலாய் படுகொலைகள் நடந்த கால் நூற்றாண்டின் பின்னர் இலங்கையின் மக்களும் அதே அனுபவத்தைப் பெற்றனர்.

1977ல் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்தும் புலிகள் இயக்கம் உருவானதைத் தொடர்ந்தும் கொடிய உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகி இங்கு பல மைலாய்கள் உருவாகத் தொடங்கின. ஜே.ஆரின் இராணுவம் ஓதியமலை, கொக்கட்டிச்சோலை கிழக்கின் மேலும் பல இடங்களில் நடாத்திய படுகொலைகளும் பிரபாகரனின் இராணுவம் கந்தன் கருணை இல்லம், காத்தான்குடி – ஏறாவூர் பள்ளி வாசல்கள், அநுராதபுரம் ஆகியவற்றில் நடாத்திய படுகொலைகளும் அமெரிக்க இராணுவம் வியட்நாமின் மைலாய் கிராமத்தில் நடாத்திய படுகொலைகளுக்கு குறைவானவை அல்ல.

எல்லா பிற்போக்கு இராணுவங்களும் கொலை இயந்திரங்கள் தான் என்பதை இந்தப் படுகொலைகள் நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றன. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாமும் ஈராக்கும்

அமெரிக்கா பொய்யான காரணங்களைக் கூறி ஈராக் என்ற சுதந்திர நாட்டை ஆக்கிரமித்து 5 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் தனது 4000 போர் வீரர்களை அங்கு இழந்து நிற்கின்றது. அமெரிக்காவைப் பொறுத்தவரை ஆள் இழப்பு வெறும் 4000 போர் வீரர்கள் தான். ஆனால் அமெரிக்காவினதும் அதன் கூட்டாளி நாடுகளினதும் ஆக்கிரமிப்புப் படைகளால் பல லட்சம் ஈராக்கிய மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் ஈராக்கின் வளங்களும் தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கப் போர் வீரர்களின் இழப்பு பற்றிப் பேசுவோர் ஈராக்கிய மக்களின் அழிவு பற்றிப் வாயே திறப்பதில்லை. இவ்வளவு அழிவுகளும் நடந்த பின்பும் போர் வெறியன் ஜனாதிபதி புஷ் இலக்கை அடையும்வரை அமெரிக்காவின் ஈராக் யத்தம் தொடரும் என கொக்கரித்துள்ளான். அவர் கூறும் இலக்கு என்ன என்பதுதான் யாருக்குமே புரியவில்லை.

வியட்நாமிலும் இவ்வாறுதான் அமெரிக்கா ஆழம் அறியாமல் காலை விட்டது. இறுதியில் பெருத்த இழப்புக்களுடன் அவமானகரமாக வெளியேறியது. அப்படியான ஒரு சரித்திரம் அமெரிக்காவுக்கு ஈராக்கிலும் எழுதப்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனெனில் வியட்நாம் மக்களின் வெற்றிக்கு அங்கு கம்யூனிஸ்ட் கட்சி கொடுத்த சரியான தலைமை முக்கிய காரணம். ஈராக்கிலும் அவ்வாறு நிகழ்ந்திருக்க கூடும்.

ஆனால் சர்வாதிகாரி சதாம் ஹுசேன் ஆட்சியைப் பிடித்ததும் முப்பதாயிரம் ஈராக்கிய கம்யூனிஸ்ட்டுகளை படுகொலை செய்து அக்கட்சியை அழித்துவிட்டார். அதன் காரணமாக சரியான வழிகாட்டல் இல்லாத போராட்டமாக ஈராக்கிய மக்களின் அமெரிக்க எதிர்ப்புப் போராட்டம் தள்ளாடிச் செல்கிறது.



## யாருக்கு யார் வழிகாட்டி?

அமெரிக்காவில் நிலவுகின்ற ஜனநாயகம் குறித்து அமெரிக்க அரசாங்கம் மட்டுமின்றி உலகம் முழுவதிலுமுள்ள அமெரிக்க விசுவாசிகளும் ஆஹா! ஓஹோ!! என புகழ்ந்து தள்ளுவதுண்டு. ஆனால் அமெரிக்க சமூகம் மடியில் எரிமலையைக் கட்டிக் கொண்டிருப்பதுபோல ஒரு பெரிய கிரிமினல் குழந்தையை தனது கருப்பையில் சுமந்து கொண்டிருக்கிறது.

அண்மையில் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட ஒரு புள்ளிவிபரத்தின்படி அந்நாட்டில் நூறுபேருக்கு ஒருவர் ஏதாவது ஒரு குற்றச்சாட்டில் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தனது வாழ்க்கையைக் கழித்து வருகிறார். அதாவது அமெரிக்காவின் சனத் தொகை 30 கோடி என்றால் 30 லட்சம் பேர் சிறைகளில் இருக்கின்றனர். இந்த இலட்சணத்தில் சீனாவிலிருந்து சிறீலங்காவரை, வட கொரியாவிலிருந்து ஈரான் வரை மனித உரிமைகள் மீறப்படுவதாக அமெரிக்க 'ஜனநாயக' அரசு கூக்குரலிட்டு வருகின்றது.

ஆனால் எல்லாவிஷயத்திலும் 'நானே முந்தி' என பெருமை பேசிவரும் தமிழன் இந்த விடயத்திலும் அமெரிக்காவைத் தோற்கடித்துவிடுவான் போலிருக்கிறது. அதாவது 1990ல் இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறிய பின் புலிகள் வகை தொகையில்லாமல் தமிழ் மக்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்ததைப் பார்த்த பலர், தங்களைப் புலிகள் கைது செய்யும் முறை எப்போது வரும் என அச்சத்துடன் காத்திருந்தது உண்டு. புலிகளின் சிறைகளில் இருந்த சில இளம் கைதிகள் 'நல்லவேளை நாம் இந்த வயதில் உள்ளே வந்துவிட்டோம். வயது போன காலத்தில் கைதுசெய்தால் என்ன செய்வது?' என பரிகாசமாகப் பேசுவதும் உண்டு.

'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்னொரு பழமொழி உண்டு. ஆனால் அது இப்பொழுது, 'அமெரிக்க எஜமான் எவ்வழி புலிகள் அவ்வழி' எனவோ அல்லது 'புலிகள்

---



### *சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றோம்*

*அர்ப்பணிப்புள்ள மனித உரிமைவாதியும், ஓயாத அரசியல் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான செல்வி மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் பாசிசப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டதை 'எதிரொலி' வன்மையாக கண்டிக்கின்றது. புலிகள் இயக்கம் என்னும் இக் கொடிய நோய்க்கிருமி முற்றாக அழித்தொழிக்கப்படும்வரை இலங்கைத் தமிழ் சமூகத்திற்கு எந்த விடிவும் இல்லை என்னும் எதிரொலியின் நிலைப்பாடு மகேஸ்வரி வேலாயுதத்தின் படுகொலையோடு மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எந்த விதமான அரசியல், கட்சி பேதங்கள் பாராது தன் சேவையை வழங்கிய இவ் உயர்ந்த தமிழ்ப் பெண் தனது சொந்தத் தாயார் மரணப் படுக்கையில் இருக்கும்போது அவருக்கு இறுதிப் பணிவிடை செய்யச் சென்றிருந்த வேளையிலேயே இப் பாதகச் செயலை புலிகள் செய்துள்ளனர். அடிப்படை மனிதாம்சம் உள்ள சகலரும் இப்படுகொலையை கண்டிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு மகேஸ்வரி வேலாயுதத்திற்கு எமது சிரம் தாழ்திய அஞ்சலிகளைச் செலுத்துகிறோம்.*

**- எதிரொலி ஆசிரியர் குழு -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி

# பிளவுக்கான காரணம் கொள்கை முரண்பாடா? அதிகாரப் போட்டியா? அல்லது இரண்டுமா ?

இலங்கையில் இப்பொழுது யுத்தத்திற்கு அடுத்ததாக அதிகமானோரால் பேசப்படும் விடயமாக ஜே.வி.பிக்குள் ஏற்பட்ட பிளவே காணப்படுகின்றது. இலங்கை அரசியலில் மூன்றாவது சக்தி எனவும் அரசாங்கங்களைத் தீர்மானிக்கும் கட்சி எனவும் ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்ட இயக்கம் எனவும் பலராலும் சிலாகிக்கப்பட்ட ஜே.வி.பி, இப்பொழுது தன் எதிர்காலம் பற்றி கேள்விக் குறியை முன்னிறுத்தி நிற்கிறது.

ஜே.வி.பி 1971ல் மேற்கொண்ட முதலாவது ஆயுதக் கிளர்ச்சியின் பின்னர் காலத்துக் காலம் இயக்கத்தில் சிறுசிறு உடைவுகள் ஏற்பட்டிருப்பினும் தற்போதையதே பெரிய உடைவாகும். கட்சியின் பிரச்சாரச் செயலாளராகவும் பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் மட்டுமின்றி கட்சியின் பகிரங்க முகமாகவும் இருந்த விமல் வீரவன்சவை கட்சியிலிருந்து நீக்கியதன் மூலமே இப்பிளவு வெளிவந்தது. கட்சியின் 37 பாராளுமன்ற உறுப்பினர்களில் 10 பேர் வீரவன்சவுடன் நிற்கின்றனர். ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் தொகையை வைத்து தலைவர் சோமவன்ச அமரசிங்க அணிக்கா அல்லது வீரவன்சஅணிக்கா ஆதரவாளர்கள் மத்தியில் அதிக செல்வாக்கு இருக்கின்றது எனத் தீர்மானித்துவிட முடியாது.





**- கரிகாலன் -**

**அடிப்படையான ஒரு விடயத்தில் இருதரப்பினரும் “ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே“ இருக்கின்றனர். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வுகாண்பதை இருதரப்பினரும் வன்மையாக எதிர்க்கின்றனர்**

ஜே.வி.பிக்குள் தற்பொழுது ஏற்பட்டுள்ள பிளவுக்கு கொள்கை முரண்பாடா அல்லது தலைமை அதிகாரப் போட்டியா, எது காரணம் என்பது தெளிவில்லாமல் இருக்கின்றது. இந்தப் பிளவுக்குக் காரணம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான் என சோமவன்ச குழுவினரும், ஐக்கிய தேசியக் கட்சிதான் காரணம் என வீரவன்ச குழுவினரும் மாறிமாறி குற்றம் சாட்டியுள்ளனர். இவை எவ்வளவு தூரம் உண்மை எனத் தெரியாவிட்டாலும் இந்தக் குற்றச் சாட்டுகள் மூலம் இருதரப்பினரும் நிற்கும் அரசியல் நிலைப்பாடுகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. விமல் வீரவன்ச கட்சியின் கொள்கைகளையும் ஒழுங்கு விதிகளையும் மீறி நடந்துள்ளார் என சோமவன்ச குழுவினர் கூறிவருகின்ற போதிலும் அந்தக் குற்றச் சாட்டுகளின் விபரம் என்ன என்பதை இதுவரை பகிரங்கமாக தெரிவிக்கவில்லை.

ஆனாலும் இருதரப்பினரதும் கடந்த காலச் செயற்பாடுகள் சில உண்மைகளை அரசல் புரசலாக வெளியே தெரியப்படுத்தி வந்துள்ளன. பொதுவாக தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையில் இரு தரப்பினரும் ஒரே போக்கைக் கொண்டிருந்தபோதும் சோமவன்ச குழுவினர் சற்றுத் தீவிரமானவர்கள் என்று கூறப்படுகின்றது. அதாவது தமிழர் – எதிர்ப்பு, இந்திய – எதிர்ப்பு, சிறீலங்கா சுதந்தரக் கட்சி – எதிர்ப்பு என்பனவற்றில் சோமவன்ச குழு தீவிரமாக இருகின்றது.

ஏனெனில் ஜே.வி.பியிடம் இப்பொழுது இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் தொகை பொதுசன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டதனாலேயே கிடைத்தது. தனித்துப் போட்டி இட்டிருந்தால் 10 உறுப்பினர்கள் கூட தெரிவாகியிருக்க முடியாது. பொதுத் தேர்தலின் பின்னர் நடை – பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் பொது தனித்துப் போட்டியிட்ட ஜே.வி.பி ஒரேயொரு பிரதேச சபையை மட்டுமே வென்றதின் மூலம் இவ்வுண்மை புலனாகும். கடந்த பொதுத் தேர்தலின் போது ஜே.வி.பிக்கு அதிக விட்டுக் கொடுப்புகளைச் செய்துவிட்டதாக அப்பொழுது சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் விமர்சனங்கள் எழுந்தன. அது உண்மைதான் என்பதை தனது தவறுகளை சுயவிமர்சனம் செய்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமீபத்தில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தனிப்பட்ட முறையில் சோமவன்சவுக்கு ஐ.தே.கவிடம் நன்றிக்கடன் ஒன்றும் இருக்கின்றது. 1988 – 89 காலகட்ட ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சியின் போது ஆர்.பிரேமதாசாவின் அரசு, விஜேவீர உட்பட ஜே.வி.பியின் முழுத் தலைமையையும் அழித்தொழித்தது. அன்றைய மத்திய குழுவில் இருந்தவர்களில் உயிர் தப்பியவர் சோமவன்ச அமரசிங்க மட்டுமே. அதற்குக் காரணம் பிரேமதாசவின் அரசில் செல்வாக்குமிக்க அமைச்சர்களில் முதன்மையானவராக இருந்த சிறிசேன கூரே, சோமவன்சவின் நெருங்கிய உறவினராக இருந்த காரணத்தால்,, அவர் சோமவன்சவைப் பாதுகாத்து, இரகசியமாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சோமவன்ச அங்கிருந்து லண்டனுக்குச் சென்று தப்பிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமவன்ச தரப்பில் இருக்கும் இந்த விடயங்களை வைத்துக் கொண்டே ஐ.தே.க கட்சி ஜே.வி.பியை பிளவுபடுத்தியுள்ளது என வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார். அதேவேளையில் வீரவன்ச ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டிலும் உண்மையில்லாமல் இல்லை. இந்த அரசாங்கத்திற்கு எதிராக கடுமையாகச் செயற்பட வேண்டும் என்ற சோமவன்ச குழுவினரின் அபிப்பிராயத்தை மத்திய குழுக் கூட்டங்களில் வீரவன்ச தீவிரமாக எதிர்த்து வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. சென்ற வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது அரசுக்கு எதிராக ஐ.தே.க, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் காங்கிரஸ் என்பனவற்றுடன் இணைந்து ஜே.வி.பியும் வாக்களிப்பதற்கு சோமவன்ச குழுவினர் போட்டிருந்த திட்டத்தை வீரவன்ச கடுமையாக எதிர்த்து வாதிட்டு முறியடித்ததாகத் தெரியவருகிறது. தற்போதைய பிளவில் கூட அரசாங்கமும் அரச சார்பு ஊடகங்களும் வீரவன்ச குழுவினருக்கு ஆதரவாக செயற்படுவது கண்கூடாகத் தெரிகிறது.

இந்த முரண்பாடுகளைத் தவிர சோமவன்சவுக்கும் வீரவன்சவுக்கும் தலைமைத்துவ ஆளுமை சம்பந்தமான முரண்பாடுகளும் உள்ளன. உத்தியோகபூர்வமாக சோமவன்சவே ஜே.வி.பியின் தலைவராக இருந்தாலும் ஜே.வி.பி என்றால் விமல்வீரவன்ச என்ற தோற்றப்பாடே நிலவுகின்றது. ஜே.வி.பியின் கீழ் மட்டங்களைப் பொறுத்தவரையிலும் பொதுமக்களைப் பொறுத்தவரையிலும் சோமவன்சவை விட விமல் வீரவன்சவே கூடுதலான பரிச்சயமானவராக உள்ளார். அவரது பேச்சாற்றலும் சோமவன்சவினுடையதை விட மக்களைக் கவரக்கூடிய ஒன்று. இவையெல்லாம் ஒருபுறமிருக்க கட்சிக்கு அப்பால் சிங்கள புத்திஜீவிகளையும் பௌத்த குருமாரையும் இணைத்து வீரவன்ச நடாத்திவரும் 'தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம்' என்ற அமைப்பு சிங்கள மேட்டுக்குழுவினர் மத்தியிலும் வீரவன்சவுக்கு செல்வாக்கைத் தேடிக் கொடுத்துள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் இருபகுதியினருக்கும் சாதக, பாதக அம்சங்கள் இருப்பினும் அடிப்படையான ஒரு விடயத்தில் இருதரப்பினரும் 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே' இருக்கின்றனர். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வுகாண்பதை இருதரப்பினரும் வன்மையாக எதிர்க்கின்றனர். இடதுசாரித்துவ நோக்கில் நின்று ஏகாதிபத்தியமும் ஐ.தே.கவுமே தமது பிரதான விரோதிகள் என்று சொல்லிக் கொண்டாலும், அமெரிக்கா ஏதாவதொரு கபட நோக்கில் புலிகளைக் கண்டித்தால் அதை விழுந்தடித்து வரவேற்பர். அதேபோல 2000ம் ஆண்டில் சந்திரிகா இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது ஐ.தே.கவுடன் சேர்ந்து அதைக் கடுமையாக எதிர்க்க அவர்கள் தயங்கவில்லை. தற்போதைய அரசாங்கம் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுவதையும் எதிர்க்கின்றனர். இந்தியாவைப் பொறுத்த அணுகுமுறையும் அவ்வாறானதே. இந்தியா புலிகளை அழிக்க ஆயுதம் வழங்கினால் அதை ஏற்றிப் போற்றுவர். இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணச் சொல்லி வலியுறுத்தினால் 'இந்திய விஸ்தரிப்புவாதம்' பற்றிக் கூச்சல்போடுவர்.

தமிழர் எதிர்ப்பையும் சந்தர்ப்பவாத அரசியலையும் மட்டும் மூலதனமாகக் கொண்டு செயற்படும் ஜே.வி.பி இருகூறுகளாக உடைந்ததில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. வருங்காலத்தில் மேலும் பல உடைவுகள் ஏற்படவும் வாய்ப்புண்டு. நாட்டில் நடைபெறுகின்ற அரசியல் போராட்டத்தில் ஒரு சரியான நிலைப்பாட்டை எடுக்காதவரை அக்கட்சி தப்பிப் பிழைக்க வழி ஏதும் இல்லை. ஏனெனில் நாட்டின் இனவாத யுத்தமாகட்டும், அரசியல் போக்காகட்டும், பொருளாதார கொள்கையாகட்டும், வெளிநாட்டு உறவாகட்டும் எப்போதும் இரு பிரதான போக்குகள் நிலவுகின்றன.

ஒன்று ஏகாதிபத்தியத்திற்கு சார்பான, மக்களை மீண்டும் அடிமைகளாக்குகின்ற அழிவை வரவழைக்கின்ற போக்கு. இதை முன்னெடுத்துச் செல்பவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் ஐ.தே.கவும் தமிழ் மக்கள் மத்தியில் புலிகளும் முஸ்லீம் மக்கள் மத்தியில் முஸ்லீம் காங்கிரசும் ஆவர். இந்த மூன்று தேசவிரோத சக்திகளும் ஓரணியில் நின்று செயல்படுகின்றனர். மறுபுறத்தில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிறுத்திச் செயற்படும் சக்திகளாக சிங்கள மக்கள் மத்தியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிகளும் முஸ்லீம், தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக சக்திகளும் இருக்கின்றன. இந்த இரண்டு சக்திகளுக்குமிடையிலான போராட்டமே இலங்கையின் இன்றைய பிரதான அரசியல் முரண்பாடாகும்.

இந்த முரண்பாட்டில் ஜே.வி.பி சரியான ஒரு நிலைப்பாடு எடுக்காமல் தனது சந்தர்ப்பவாத அரசியலுக்கு ஏற்ப சிறீலங்கா சுதந்திர கட்சியுடனும் ஐ.தே.கவுடனும் மாறிமாறிக் கூட்டுச் சேர்ந்ததின் விளைவே இன்று அக்கட்சியில் ஏற்பட்ட பிளவுக்கு அடிப்படைக் காரணம். இனிமேல் இரண்டு பிரிவுகளும் இரண்டு பக்கமும் (ஐ.தே.க பக்கமும் சிறீ.ல.சு.க பக்கமும்) ஒதுங்குவதைத்தவிர வேறு வழியில்லை. அவ்வாறான ஒரு மாற்றம் தமிழர் பிரச்சினை பற்றிய கொள்கையிலும் ஏற்பட்டால் ஆச்சரியமுற ஏதுமில்லை. மொத்தத்தில் ஜே.வி.பிக்குள் ஏற்பட்ட பிளவு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுமட்டுமல்ல, வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுமாகும்.



நன்றி: Daily Mirror

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரத்தை மாற்றி எழுதிய ரொறன்ரோ தமிழ் - சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டம்

இந்த வருட தமிழ் – சிங்கள சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டம் கனடாவின் ரொறன்ரோ மாநகரிலுள்ள ஸ்கபரோ நகரில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஏப்பிரல் 13ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை ஸ்காபரோவிலுள்ள Agincourt Collegiate Institute ல் இந்த கொண்டாட்டம் நடைபெற்றது. கனடாவிலுள்ள இலங்கைத் தூதரகம் ஒழுங்கு செய்திருக்க வேண்டிய இந்தக் கொண்டாட்டத்தை அவர்கள் பாராமுகமாக இருக்க பொது மக்களின் உதவியுடன் Canadian Democratic Tamil Cultural Association என்ற பொது அமைப்பு சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தது என்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயம். இதுவென்ன பிரமாதம், சித்திரப் புத்தாண்டை வருடாவருடம் சிறப்பாக கொண்டாடுவது வழமைதானே என சிலர் நினைக்கலாம். அதுவல்ல நாம் குறிப்பிடும் சிறப்பு.

வழமையாக ரொறன்ரோவில் எந்த விழாவை எடுத்துக்கொண்டாலும் அது புலிகளின் முகவர் அமைப்புகளாலேயே நடாத்தப்படுவது வழமை. அந்த விழாக்களில் இலங்கையைச் சேர்ந்த சகோதர சிங்கள மக்களோ, முஸ்லீம் மக்களோ மட்டுமல்ல தமிழர்களான கிழக்கு மாகாண, மலையகத் தமிழர்களும் அழைக்கப்படுவதும் இல்லை. அவர்கள் பங்குபற்றுவதும் இல்லை. யாழ்ப்பாணத்தவர்களே எல்லாமுமாக இருப்பர். அந்த மக்கள் கூட பெரும்பாலும் விரும்பிச் செல்வதில்லை. அங்கு நாட்டிலே இரத்த உறவுகளும் சொந்து சுகங்களும் இருப்பதால் போகாமலிருந்தால் புலிகள் ஏதாவது ஒரு வழியில் பழிவாங்கிவிடுவார்களோ என்ற அச்சம் காரணமாகவே செல்வதுண்டு.



எதற்கெடுத்தாலும் தமிழ் இனவெறியையும் சிங்கள, முஸ்லீம் விரோதத்தையும் புலிகளும் அவர்களுக்கு வால்பிடிப்பதற்காக செயற்படுகின்ற ஊடகங்களும் வரிந்து கட்டிக்கொண்டு வாந்தியெடுக்கின்ற கனடாவில், அதற்கு முற்றிலும் மாறாக தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லீம்கள் என இலங்கையின் மூவின மக்களும் 500க்கு மேற்பட்டவர்கள் குடும்பம் குடும்பமாக வந்து மிகவும் அந்நியோன்யமான முறையில் புத்தாண்டைக் கொண்டாடியமை ஒரு திருப்புமுனை என்றுதான் சொல்லவேண்டும்.

இன்னொரு வகையிலும் இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டம் சிறப்புத் தன்மையைக் கொண்டுள்ளது. அதாவது அண்மையில் கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழ் நாட்டின் தி.மு.க அரசு தைப்பொங்கல் தினமே தமிழர்களின் புத்தாண்டு தினம் என உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தது. அதைத் தொடர்ந்து புலிகளின் அடிவருடிகள் சிலர் இலங்கைத் தமிழர்களும் அவ்வாறே செய்ய வேண்டும் என பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

அவ்வாறு அவர்கள் பிரச்சாரம் செய்ததிற்கு இரண்டு நோக்கங்கள் இருந்தன.

ஒன்று, இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் அடிப்படையில் ஒரே கலாச்சாரப் பின்னணியை (உணவு, உடை, மத நம்பிக்கைகள் உட்பட) கொண்டவர்கள் என்பதை இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டம் இருவருக்கும் பொதுவாக இருப்பது எடுத்துக் காட்டுகின்றது. எனவே எப்படியும் அதைக் குழப்பி, தமிழர்களை அந்தப் பாரம்பரியத்திலிருந்து விடுவித்து தனியாக்க வேண்டுமென்பது.

இரண்டாவது, தமிழ் நாட்டில் சோழப் பேரரசு கோலோச்சிய காலத்தில் அவ்வரசு, தென்னாசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் பல நாடுகளை ஆக்கிரமிப்பு செய்து கைப்பற்றி வைத்திருந்தது. சோழப் பேரரசு செய்த ஆக்கிரமிப்புக் காலத்தையே திராவிட வாரிசுகளான சி.என். அண்ணாதுரை முதல் இன்று புலிப்பினாமிகளாக செயற்படும் வை. கோபாலசாமி, பழ.நெடுமாறன், எஸ்.ராமதாஸ், தொல்.திருமாவளவன் வரை தமிழர்களின் பொற்காலம் என வர்ணிப்பதுண்டு. அந்த சோழனின் புலிக் கொடியையே பிரபாகரனும் தனது இயக்கத்தின் கொடியாக வைத்துள்ளார். (இராஜராஜ சோழனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அவனது கடற்படையிலிருந்த போர்வீரர்களின் ஒரு பகுதியினரே வேலையில்லாத நிலையில் வல்வெட்டித்துறையில் வந்து குடியேறியதாக ஒரு வரலாறு உண்டு)

எனவே பிரபாகரனின் மூலமாக சோழப் பேரரசினை மீண்டும் நனவாக்க புலிகளின் தமிழகப் பினாமிகள் தலையால் மண் கிண்டுவது ஒன்றும் புதுமையான விடயமல்ல. இந்த சூழ்நிலையில் கருணாநிதி அறிவித்த தைப்பொங்கலை தமிழரின் புத்தாண்டாக கொண்டாடும் திட்டத்தை ஆதரிப்பதின் மூலம் அவர்களை மனம் குளிர வைக்கலாம் என எண்ணித்தான் புலிகள் அப்பிரசாரத்தை மேற்கொண்டனர். (சோழப் பேரரசு இலங்கையில் பலமுறை படையெடுத்த காரணத்தால்தான் சிங்கள மக்கள் இந்தியா மீதும் தமிழர்கள் மீதும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க நேர்ந்தது. அதை உறுதிப்படுத்துவது போலவே பிரபாகரன் புலிக் கொடியுடன் செய்யும் அட்டகாசங்களும் அமைந்துள்ளன)

ஆனால் புலிகள் ஒன்று நினைக்க இலங்கைத் தமிழர்கள் வேறு ஒரு முடிவை எடுத்துவிட்டனர். புத்தாண்டுப் பிரச்சினை சம்பந்தமாக ஆலோசனை நடாத்திய இலங்கையின் இந்து அமைப்புகளான அகில இலங்கை இந்து மாமன்றம், அகில இலங்கை இந்து மதபீடம், நல்லை ஆதினம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானம், திருக்கேதீஸ்வர – திருக்கோணேஸ்வர – முன்னேஸ்வர பரிபாலன சபைகள் என்பனவும், வாக்கிய மற்றும் திருக்கணித பஞ்சாங்கங்களை வெளியிடுபவர்களும் சித்திரைப் புத்தாண்டு தினமே இலங்கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் புத்தாண்டு தினம் என தீர்மானித்துவிட்டனர். அதன் மூலம் இலங்கைத் தமிழ் தேசியம் வேறு, இந்திய தமிழ் தேசியம் வேறு என்பதை நிலைநாட்டிவிட்டனர். இந்த முடிவானது இலங்கைத் தமிழ் தேசியத்துக்கு விரோதமாக செயற்படும் பாசிஸ்ட்டுகளான புலிகளுக்கும் அவர்களது திராவிடக் கூட்டாளிகளுக்கும் விழுந்த மரண அடியாகும்.

எனவே ரொறன்ரோவில் நடந்த தமிழ் – சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டமானது வெறுமனே ஒரு கொண்டாட்டம் என்னும் நிலையைக் கடந்து சிறப்பு முக்கியத்துவமுள்ள ஒன்றாக அமைந்துவிட்டது. இந்தக் கொண்டாட்டத்தில் பரதநாட்டியம், கண்டிய நடனம் என்பன இடம்பெற்றதுடன், மெல்லிசைப் பாடல்களும் இடம்பெற்றது அனைவரையும் உவகையுற வைத்தது. இன்னொரு சிறப்பு அம்சமாக இலங்கையர்களுடன் கனடிய வெள்ளை இனத்தவர்களும் வேறு இனத்தவர்களும கலந்து கொண்டு இந்நிகழ்வைச் சிறப்பித்ததும் குறிப்பிடத்தக்கது.

– ரொறன்ரோ நிருபர் –

*புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் Canadian Democratic Tamil Cultural Association (CDTCA) அமைப்பின் தலைவர் சாம் ராஜேந்திரன் அவர்கள் ஆற்றிய உரை கீழே தரப்படுகின்றது.*

History has shown, time and again, that though forces of fanaticism, intolerance and extremism may dominate in the short run, ultimately it's moderation, reasonableness, and sobriety that prevails. Because human beings – no matter what their backgrounds are – are innately fair-minded, decent and reasonable. Human beings are also pragmatic and rational. No matter what horrendous atrocities are committed – ultimately sanity will prevail. This is what history shows us.



There simply is no history of extremism dominating forever.

We of the Canadian Democratic Tamil Cultural Association are unshaken in our belief that this tragic chapter in our history will pass – that the people of Sri Lanka will ultimately find a way to resolve their differences and accommodate each others' concerns. This mutual understanding and adjustment is already reflected in the way they are coping with the ongoing war.

One of the positive developments in Sri Lanka today is that more Tamils are living among the Sinhalese in the South than ever before. Ironically this is a consequence of the actions of those who are trying to turn the two communities into hostile camps. A basic truism of social science is that all social action have unintended consequences. One of the ironies of social changes brought about by the conflict in Sri Lanka is that social interaction between the two communities has increased phenomenally. Tamils who have had little interaction with the Sinhalese in the past are now living side by side with them.

In spite of the conflict, people of all backgrounds .... all walks of life..... somehow manage to get along in Sri Lanka in their day to day lives. In most parts of the country ...... Sinhalese, Tamils, Muslims, Malays and Burghers ..... they all live side by side and they toil together in their fields, factories and offices and in their neighbourhoods.

Though the world media portrays otherwise, we - Sri Lankans – know in our hearts we are a caring, civilized society. No one can take that away from us. We no doubt have our difficulties and challenges as any multi-ethnic society does – but we have not lost our humanity. Though we may belong to different communities, as Sri Lankans we all share the joy of living on this beautiful island along with our common predicament: the need to find a way to accommodate each others' concerns. We shall endure. We are a resilient people.

This is what we decided to celebrate: our solidarity as a decent people. And what more fitting occasion than the Sinhala Tamil New Year. This festival reflects the fact that we share common cultural bonds.
By celebrating together we are also showing the Canadian mainstream that we are not hopelessly divided by some unbridgeable gulf as portrayed by the superficial western media.

Finally, the best tribute that we can pay to the ordinary but courageous people of Sri Lanka is to emulate them and live amicably in the Diaspora. We can learn from them how to live together in spite of all the political strife and the negative media hype. We can learn from them how to remain human in the most brutal circumstances.....how not to lose one's humanity in the face of the gravest of provocations.

In Sri Lanka we live together, work together and struggle together to achieve peace. So why can't we in Canada? Why can't we have a dialogue? In my view, nothing that we do in the Diaspora to promote the well-being of our brothers and sisters in Sri Lanka can be more useful than such a dialogue.

But in order to make that contribution, we must not forget even for a moment that we are also Canadians. Yes it's possible to be a Sri Lankan and a Canadian at the same time in today's postmodern world. Under globalization multiple allegiances and trans-national identities are becoming facts of life. I believe it's by exercising our "Canadian-ness" that we can make a positive contribution towards resolving the conflict in Sri Lanka.

As Canadians, we are entitled to the rights and freedoms guaranteed in the Canadian Charter. Are we going to pursue narrow, divisive political goals in Canada and invoke the charter when inevitably the Canadian authorities start cracking down on these activities? In other words are we going to use the very Canadian Charter to undermine the democratic rights of our own people in Canada? Are we going to abuse Canadian democracy to create more suffering for our people in Sri Lanka? Or, are we going to use the Charter in its proper spirit - its intent, rather than its letter.

Today I believe we have taken the first step in that direction. For what we have done by celebrating Sinhala and Tamil New Year together in Toronto on 13th April, 2008 is to emphatically exercise one of the fundamental freedoms enshrined in the Canadian Charter: the freedom of association. The right to associate as we like, the right to gather as we choose - not as those with authoritarian, extremist persuasions among us would prefer. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க உதவிக்கு ஆப்கானிய உதாரணம்

-எல். எம். எம். இத்ரீஸ்-

அரச சார்பற்ற நிறுவனங்கள் என்றும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் என்றும் தம்மை அழைத்துக் கொள்கின்ற என்.ஜி.ஓக்கள் (NON GOVERNMENTAL ORGANIZATIONS) யுத்தம் நடைபெறுகின்ற நாடுகளிலும் பல மூன்றாமுலக நாடுகளிலும் நிவாரணப் பணிகள் என்று சொல்லிக் கொண்டு பல கருமங்களில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றில் இரண்டு வகையறாக்கள் உண்டு. ஒன்று உள்நாட்டு நிறுவனங்கள், மற்றையது சர்வதேச நிறுவனங்கள். இந்த இருவகைப்பட்ட என்.ஜி.ஓக்களுக்கும் நிதி வழங்குபவர்கள் மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளே.

இவர்கள் நிவாரணப் பணி என்ற போர்வையில் செய்வதெல்லாம் உள்ளூரில் அரசியல் சீர்குலைவு வேலைகளும் உளவு வேலைகளுமே. இவர்களுக்கு ஒதுக்கப்படும் பணத்தையாவது மக்கள் நலன்களுக்கு செலவிடுகின்றார்களா என்றால் அதுவும் கிடையாது. வெறும் கண்துடைப்புக்காக இரண்டொரு திட்டங்களை அறிவிப்பார்கள். இந்த என்.ஜி.ஓ நிறுவனங்கள் இலங்கையிலும் நூற்றுக் கணக்கில் செயற்படுகின்றனர். இவர்கள் அங்கு அரசாங்கத்திற்கு எதிராக பயங்கரவாத புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக செயல்பட்டு வருவது பல சந்தர்ப்பங்களில் அம்பலத்துக்கு வந்துள்ளது. இதே போல யுத்தம் நடைபெறும் ஆப்கானிஸ்தானிலும் 94 உதவி நிறுவனங்கள் செயற்படுகின்றன. அங்கு வழங்கப்படும் சர்வதேச நிதி உதவி எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பதை சில மனித உரிமை அமைப்புகள் சமீபத்தில் வெளியிட்டன.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரை 90 வீதம் வெளிநாட்டு உதவியிலேயே தங்கி நிற்கின்றது. 2001க்கு பின்னர் சர்வதேச சமூகம் 25 பில்லியன் டொலர்களை உதவி செய்வதாக அறிவித்திருந்த போதும் 15 பில்லியன் டொலர்களே வழங்கப்பட்டன. ஆனால் முக்கியமான விடயம் என்னவெனில் இந்த 15 பில்லியன் டொலரில் 6 பில்லியன் டொலர் கொடையாளி நாடுகளின் பல்தேசியக் கம்பனிகளுக்கு இலாபமாகவும் நிபுணத்துவ ஆலோசனைச் சம்பளங்களாகவும் திரும்பி சென்றுவிட்டன. நிதி உதவிகளில் பெரும்பகுதி எப்போதும் நிபுணத்துவ ஆலோசனை நிறுவனங்கள் அல்லது ஒப்பந்தக்காரர்களிடம் வேலை செய்யும் வெளிநாட்டவர்களின் சம்பளம், குடியிருப்பு, பாதுகாப்பு, போக்குவரத்து என்பனவற்றுக்கே செலவழிக்கப்பட்டு வருகின்றன.

ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் ஒரு வெளிநாட்டவரின் வருடாந்த சம்பளம் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்களாகும். (இலங்கைப் பணத்தில் மாதம் இருபத்திரண்டரை லட்சமாகும்) இது வருடம் 1000 அமெரிக்க டொலர் சம்பளம் வாங்கும் ஒரு ஆப்கானிய அரச ஊழியரின் சம்பளத்தின் 200 மடங்காகும். ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டு இராணுவத் தலையீடு ஏற்பட்டபின் அந்நாட்டு நபர் ஒருவருக்கு வருடமொன்றுக்கு வெறுமனே 57 அமெரிக்க டொலரே உதவியாகக் கிடைத்துள்ளது. ஆனால் பொஸ்னியாவிலும் கிழக்கு திமோரிலும் இத்தொகை சற்றுக் கூடுதலாக முறையே, 679, 233 டொலர்களாக வழங்கப்பட்டது. ஆப்கானிய மக்களுக்கு உதவி தொகையாக வழங்குவதைவிட கூடுதலாக இராணுவ செலவீனங்களுக்கே ஒதுக்கப்படுகின்றது. தலிபான் கிளர்ச்சிக்காரர்களுடன் போரிடுவதற்காக அமெரிக்கா மட்டும் ஒரு நாளைக்கு 100 மில்லியன் டொலர்கள் செலவிடுகின்றது. அதேவேளையில் எல்லா கொடையாளி நாடுகளும் சேர்ந்து ஒரு நாளைக்கு 7 மில்லியன் டொலர்களை மட்டுமே உதவி தொகையாக வழங்குகின்றன.

ஆப்கானிஸ்தானுக்கு ஆகக் கூடுதலான உதவி வழங்கும் நாடு அமெரிக்கா ஆகும். அமெரிக்காவின் USAID நிறுவனம் வழங்கும் இத் தொகையில் ஏறத்தாள அரைவாசியை அமெரிக்காவின் 5 பல்தேசிய நிறுவனங்களான KBR, THE LOUIS BERGER GROUP, CHEMONICS INTERNATIONAL, BEARING POINT மற்றும் DYNCQRP INTERNATIONAL என்பன இலாபமாக உறிஞ்சிவிடுகின்றன. அதேவேளையில் அமெரிக்கா உதவித் தொகையாக வழங்குவதாக வாக்குறுதி அளித்த 5 பில்லியன் டொலர்கள் இன்னமும் வழங்கப்படாமலே இருக்கின்றது. ஏனைய உதவி வழங்கும் நாடுகளின் இலட்சணமும் இதுவாகவே இருக்கின்றது.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல அமெரிக்காவும் அதனது கூட்டாளிகளும் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் உலகம் முழுவதும் செய்து வரும் மோசடி வேலைகளுக்கு ஆப்கானிஸ்தான் ஒரு உதாரணமாகத் திகழ்கின்றது. இதையே இலங்கையிலும் செய்ய வேண்டுமென்று எமது நாட்டு அரசியல் வாதிகள் சிலரும் என்.ஜி.ஓக்களும் தினம் ஓயாமல் கூறிவருகின்றனர். சர்வதேச சமூகத்தின் தலையீட்டுக்கும் ஐ.நாவின் பிரசன்னத்துக்கும் அவர்கள் விடுக்கும் அழைப்பு இந்த வகையானதே ■

## பண்டாரநாயக்க வம்ச அரசியல் முடிவுக்கு வந்தள்ளது! சந்திரிகா கூறுகிறார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜய குமாரதுங்க படுகொலை செய்யப்பட்ட 20வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி சந்திரிகாவை பேட்டி கண்ட பத்திரிகை ஒன்று "பண்டாரநாயக்க அரசியல்" முடிவுக்கு வந்துள்ளதா என அவரிடமே கேள்வி எழுப்பியது.

அதற்குப் பதிலளித்த சந்திரிகா தான் கட்சியில் பதவிகள் எதையும் வகிக்காமல் பணியாற்ற விரும்புவதாகவும் ஆனால் தனது பிள்ளைகள் அரசியலுக்கு வரமாட்டார்கள் என்றும் அவ்வாறு வராமல் இருப்பதற்கு தான் அவர்களுக்கு மூளைச்சலவை செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி...... ⇨

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லைகளற்ற நிருபர்கள்" (REPORTERS WITHOUT BORDERS) என்றொரு ஊடகவியலாளர்கள் அமைப்பு பிரான்சின் தலைநகர் பரீசை தளமாகக் கொண்டு இயங்கிவருகின்றது. இந்த அமைப்பு அண்மைக் காலத்தில் இலங்கையில் ஊடக சுதந்திரம் மீறப்படுவது குறித்து விடுத்த அறிக்கைகளை நிறுத்தால் அந்தர் கணக்கில் வரும். இலங்கையைப் பற்றி அந்த அமைப்புக்கு அலாதி பிரியம் வரக் காரணம் அங்கும் இந்த அமைப்பின் தன்மையை ஒத்த சகோதர அமைப்பு ஒன்று இருப்பதுதான். அதன் பெயர் சுதந்திர ஊடக இயக்கம் (FREE MEDIA MOVEMENT)

இந்த சு.ஊ. இயக்கம் புலிகளுக்கு அல்லது ஐ.தே.கவுக்கு சார்பான ஊடகவியலாளர்களுக்கு எறும்பு கடித்தாலும் ஊடகவியலாளர்களுக்கு ஆபத்து என கூச்சல் போடும். கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யும். அவர்களுக்கு எதிரானவர்கள் யாராவது பாதிக்கப்பட்டால் உப்புச்சப்பற்ற ஒரு அறிக்கையோடு சரி. இந்த அமைப்பின் முக்கியஸ்தராக இருக்கும் சுனந்த தேசப்பிரிய என்பவரின் அரசியல் பின்னணி எல்லோரும் அறிந்த ஒன்று.

# ஊடக (அ)தர்மத்தின் ஊற்றுக் கண்கள்

-வெங்கடேஷ்-

இந்த சுனந்த தேசப்பிரிய மட்டக்களப்பில் பத்திரிகையாளர் நடேசன் சுடப்பட்டதும், அதைச் சாக்காக வைத்து புலி சார்பு ஊடகவியலாளர்கள் பலரை சுவிட்ஸர்லாந்துக்கு அகதி புகலிடம் பெற்று அனுப்பியவர். புலிகளுக்கு எதிரான ஊடகவியலாளர்கள் பலர் உயிர் ஆபத்தை எதிர் நோக்கிய போதும் இவரை உதவிகேட்டு அனுகவில்லை. காரணம் இவர் உதவி செய்யமாட்டார் என்பதும் புலிகளுக்கு தகவல் போய்விடும் என்பதனாலேயே.

இப்படியான சு.ஊ. இயக்கத்துடன் நட்புறவு பூண்டுள்ள பரீஸ் இயக்கமும் லேசுப்பட்டதல்ல. மேற்கத்திய நாடுகளில் ஊடகவியலாளர்களின் உரிமைகள் அல்லது மனித உரிமைகள் பாதிக்கப்பட்டால் உலகம் இருண்டு விட்டதைப் போல கண்ணை மூடிக் கொண்டு தியானம் செய்யும். உதாரணமாக பிரான்சில் கடந்த இரண்டு வருடங்களாக கறுப்பின இளைஞர்கள் தாம் நிறப்பாகுபாடு காரணமாக ஒடுக்குமுறைக்குள்ளாவதை எதிர்த்து வன்முறைக் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது அரசாங்கம் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டது, அது பற்றி இந்த எல்லைகளைப் பிய்த்துக் கொண்டு செயற்படுகின்ற ஊடகவியல் மேதாவிகள் மூச்சும் காட்டவில்லை.ஆனால் இப்பொழுது சீனாவின் திபெத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் பின்னணியுடன் தலாய்லாமா கும்பல் பிரினைவாத வன்செயல்களில் ஈடுபட்ட போது அதை சீன அரசாங்கம் அடக்கியதையிட்டு இந்த ஊடகவியலாளர் அமைப்பு பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்கிறது. சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் ஆகஸ்ட் 8ம் திகதி ஆரம்பமாகவுள்ள சர்வதேச ஒலிம்பிக் போட்டி ஆரம்ப நிகழ்வை உலகத் தலைவர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறது.

உலகின் எல்லா நாடுகளிலும் ஏதாவதொரு உள்நாட்டுப் பிரச்சினை இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்காக அந்த நாடுகளில் நடைபெறுகின்ற முக்கியமான சர்வதேச நிகழ்வுகளை பகிஷ்கரிக்கும்படி கோருவது உலக வழமை அல்ல. அந்த வழமைக்கு மாறாக இந்த அமைப்பு சீன ஒலிம்பிக்கை பகிஷ்கரிக்கும்படி கோருகிறது. இந்த அமைப்புக்கு சீனா, இலங்கை போன்ற நாடுகள் தான் கண்ணை உறுத்துகிறது. ஏனெனில் இந்த நாடுகள் ஏகாதிபத்தியத் தலையீட்டை எதிர்க்கின்றனவே.

இவர்கள் தமது அமைப்புக்கு வைத்துள்ள பெயருக்கும் அவர்களது செயற்பாட்டுக்கும் நிறைய ஒன்றுமையுண்டு. இவர்கள் நாடுகளின் எல்லைகளை, சுதந்திரத்தை, சுயாதிபத்தியத்தை, இறைமையை மதிப்பதில்லை. அதைத்தான் அமெரிக்காவும் செய்கின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எல்லைகள் கிடையாது. உலகம் முழுவதும் அவர்களது பிரதேசம். அவர்களுடன் சேர்ந்து இவர்களும் சீனாவின் எல்லைகளை அழிக்கவும் அமெரிக்காவின் எல்லைகளை திபெத் வரை விஸ்தரிக்கவும் விரும்புகிறார்கள் போலும்.

*11ம் பக்கத் தொடர்ச்சி.....*

*மேலும் அவர் கூறுகையில் தனது குடும்பம் ஏற்கனவே பல இழப்புகளைச் சந்தித்துள்ளதாகவும் தனது தகப்பனார் பண்டாரநாயக்கவும் தாயார் சிறிமாவோவும் தீவிர அரசயலில் இருந்தது போல இப்பொழுது தனது சகோதரர் அனுரா பண்டாரநாயக்க தீவிர அரசியலில் ஈடுபடுகின்றார். என்றும் அவருக்குப் பின் "பண்டாரநாயக்க வம்ச அரசியல்" ஏறக் குறைய முடிவுக்கு வந்தவிடும் எனறும் குறிப்பிட்டார்.*


*அத்துடன் தற்பொழுது ராஜபக்ச குடும்பம் பண்டாரநாயக்க அரசியலை அழித்து தமது குடும்ப வம்ச ஆட்சியை உருவாக்கிவருவதாகவும் குற்றம் சாட்டினார்.*

*சந்திரிகாவின் கூற்றுப்படி பார்த்தால் இப்பொழுது அனுரா பண்டாரநாயக்க காலமாகிவிட்டதால் இனி இலங்கையில் பண்டாரநாயக்க வம்ச அரசியல் தொடர வாய்ப்பில்லை என்று தான் கருதவேண்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு சம்பவத்தையும் நினைவு கூரவேண்டியுள்ளது.*

*1971ம் ஆண்டு ஆயுதக் கிளர்ச்சிக்காக சிறிமாவோவின் அரசு விஜேவீர உட்பட நூற்றுக்கணக்கான ஜே.வி.பி உறுப்பினர்களை சிறையில் அடைத்திருந்தது. 1977ல் ஜே.ஆர் ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்ததும் அவர்களை விடுதலை செய்தார். அதற்கு நன்றிக் கடனாக விஜேவீர நாடு முழுவதும் சென்று "பண்டாரநாயக்க வம்சத்தின் முடிவு", "ஹொரகொல்லை வளவின் வீழ்ச்சி" என்ற தலைப்புகளில் உரை நிகழ்த்தி வந்தார்.*

*இப்பொழுது அனுராவின் மறைவுடன் ஐ.தே.க, மகிந்த ராஜபக்ச ஆகியோரின் எதிர்பார்ப்பு மட்டுமின்றி ஜே.வி.பியின் ஆசையும் நிறைவேறியுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலிகளுக்கு மரண அடி கொடுத்த கருணாநிதி !

ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழக முதல்வர் கருணாநிதி 'பழமும் தின்று கொட்டையும் போட்டவர்' என்றும் சொல்லலாம் அல்லது 'சூடு கண்ட பூனை' என்றும் சொல்லலாம். அந்தப் பிரச்சினையில் ஏதாவது கருத்துச் சொல்ல நேர்ந்தால் மிகவும் கவனமாகவே தனது வார்த்தைகளைப் பிரயோகிப்பார். கேட்பவர்கள் அவர் அதைச் சொல்கிறாரா, அல்லது இதைச் சொல்கிறாரா என மண்டையைப் போட்டு உடைக்கும் அளவுக்கு இருக்கும் அவரது வார்த்தைகள்.

தனது நேரடி எதிரியான வை.கோபாலசாமிக்கும் மறைமுக எதிரியான எஸ்.ராமதாசுக்கும் பிடி கொடுக்கக் கூடாது என்பதே அவ்வாறு அவர் கருத்துக் கூறுவதற்கு பிரதான காரணம். அத்துடன் புலிகள் முன்பு அவருடன் விட்ட சேஷ்டைகள் இன்னொரு காரணம். அதனால் கருணாநிதி என்ன சொன்னாலும் 'அவன் சரியான கள்ளனப்பா' என இலங்கைத் தமிழர்கள் சிலர் சொல்வதுண்டு.

ஆனால் தமிழக அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் கருணாநிதி அளவுக்கு ராஜதந்திரிகள் எவரும் இல்லையெனலாம். அதேபோல அவர் அளவுக்கு அனுபவவாதியும் யாருமில்லையெனலாம். அண்மையில் வைகோவும் ராமதாசும் இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையிலெடுத்த போது அவர் அதைக் கையாண்ட முறை அதற்கொரு உதாரணம்.

வன்னியில் புலிகள் நாளுக்கு நாள் வேண்டும் அடியைக் கண்டு பொறுக்காத வை.கோ. அண்மையில் நோர்வே சென்று உலக நாடுகளிடம் ஒப்பாரி வைத்தார். பின்னர் இந்தியா திரும்பி பிரதமர் மன்மோகன்சிங்கிடம் ஓலமிட்டார். புலிகளைப் பாதுகாப்பதற்காக 'யுத்தத்தை நிறுத்த வேண்டும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும்' என அங்கும் இங்குமாக கத்தித் திரிகின்றார். இறுதியில் தனது கட்சி எம்.எல்.ஏ. மூலம் சட்டசபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். ராமதாஸ் கட்சி எம்.எல்.ஏ அதை வழி மொழிந்தார். ஆனால் கருணாநிதி முந்திக்கொண்டு இந்திய அரசாங்கம் தலையிட்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என அனைத்துக் கட்சியின் பொதுத்தீர்மானமாக அதை நிறைவேற்றி வைகோவினதும் ராமதாசினதும் திட்டத்தில் மண்ணைப் போட்டுவிட்டார்.

போதாதிற்கு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது கருணாநிதி நிகழ்த்திய உரையில் குறிப்பிட்ட விஷயங்கள் புலிகளுக்கும் அவர்களின் தமிழக பினாமிகளுக்கும் ஏககாலத்தில் கொடுத்த பெரும் மரண அடியாகவும் இருக்கின்றது.

மிகக் கவனமாக அவர் ஆற்றிய உரையில் அவர் கீழ்கண்டவாறு குறிப்பிட்டார்:

'ஒரு குழுவாக அவர்கள் இருந்து போராடியிருந்தால் நேபாளம் போல வெற்றி பெற்றிருப்பார்கள். வேறு பல நாடுகளைப் போல விடுதலை பெற்றிருப்பார்கள். போராளிக் குழுக்களுக்குள்ளேயே நடந்த மோதல் காரணமாகத்தான் இந்தப் பேராட்டம் பலவீனமாகிவிட்டது. இன்று அவர்களுக்கு பரிந்துரை செய்து பேச வேண்டியிருக்கிறது. இலங்கையில் விடுதலை பெற சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள் என்று போராளிகளுக்கு வேண்டுகோள் விடும் நிலைமை ஏற்பட்டது. ஒரு குழு இன்னொரு குழுவுடன் மோதும் போக்கைக் கடைப்பிடித்தது. தலைவர்கள் கொல்லப்பட்டார்கள், வெட்டப்பட்டார்கள், சுடப்பட்டார்கள்.

அங்கு ம.பொ.சி. போன்று இருந்த அமிர்தலிங்கம் கொல்லப்பட வேண்டியவரா? விருந்துக்கு அழைக்கப்பட்டு, சிற்றுண்டி வழங்கி, தேனீர் எடுத்து வர அவரது மனைவி மங்கையற்கரசி சென்று வருவதற்குள் கணவரும் உடனிருந்த தோழர்களும் பிணமாகக் கிடந்தார்கள். போராளிகளே அவர்களுக்குள் அடித்துக்கொணடு தமது போராட்டத்தை பலவீனமாக்கிவிட்டார்கள்.'

அதுமட்டுமன்றி கருணாநிதி, தமிழீழமென்பது புலிகளின் வெறும் கனவு என்றும் கூறியிருப்பதோடு புலிகளை ஒடுக்குவதற்காக இலங்கைக்கு கொடுக்கப்படும் ஆயுதமோ அல்லது புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையோ இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்றும் கூறியிருக்கிறார்.

இவ்வளவும் கருணாநிதி சொன்ன வார்த்தைகள்! எவ்வளவு அப்பட்டமான உண்மை. கருணாநிதிக்கு தெரிந்த இவ்வுண்மைகள் ஏன் வைகோவுக்கும் ராமதாசுக்கும் நெடுமாறனுக்கும் கோமாளி திருமாவளவனுக்கும் தெரியவில்லை? தெரியாமலல்ல புலிகளிடம் மாதாமாதம் கைநீட்டி வாங்கும் காசுக் கத்தைகளுக்காக இல்லாததையும் பொல்லாததையும் பேசித் திரிகின்றனர். 'பூனைக்குக் கொண்டாட்டம் – சுண்டெலிக்கு திண்டாட்டம்' என்பது போல அவர்கள் காசு உழைப்பதற்காக புலிகளின் யுத்தத்தை ஆதரித்துச் செய்யும் பிரச்சாரத்தால் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கை எவ்வளவு தூரம் நாசமாகிறது என்பதைக் கொஞ்சமாவது அவர்கள் எண்ணிப் பார்த்தார்களா? செய்யமாட்டார்கள். பதிலுக்கு என்ன செய்வார்கள்?

'கருணாநிதி துரோகி' என்று சொல்லிவிட்டு புலிகளிடம் மேலும் பணம் கறந்து கொள்வார்கள்! ■

- அழகிரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RCMP யின் அடுத்த குறி

கனடாவில் அமைந்துள்ள உலகத் தமிழர் இயக்க காரியாலயங்கள் சீல்வைக்கப்பட்டாகி விட்டன. புலிகள் இயக்கத்துக்காக உலகத் தமிழர் இயக்கம் சட்ட விரோதமாக கப்பம் வாங்கியது அம்பலத்துக்கு வந்துள்ளது. தமிழர்களை மிரட்டி வங்கிக் கணக்குகளில் இருந்து மாதா மாதம் கப்பம் அறவிடும்படி புலிகளின் தலைமை உலகத் தமிழரின் முக்கியஸ்தர்களுக்கு அனுப்பிய கடிதம் பிடிபட்டுள்ளது. கனடாவில் தேர்தல் பணிகளுக்காக மட்டும் பாவிக்க வேண்டிய வாக்காளர் அட்டைகளை திருட்டுத்தனமாக எடுத்து அதனடிப்படையில் தமிழரின் இருப்பிடங்களை அறிந்து கப்பம் அறவிட்டதும் இப்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

கள்ளக் கடத்தல் பாரம்பரியத்தையுடைய வல்வெட்டித்துறையும் மற்றவர்களை சுத்திப் பிழைக்கும் வியாபாரத்தில் கரைகண்ட புங்குடு தீவு வியாபரிகளும் சேர்ந்து (கதிர்காமக் கந்தா நீயும் புங்குடு தீவானுக்கு போயிலை வித்தனீயோ, இப்பிடி கோவணத்தோடு நிற்கிறாய் என்ற கதையை இவ்விடத்தில் நினைவு கூரவும்) கனடா வாழ் தமிழரை தட்டிச்சுத்தி செய்த திருகு தாளங்கள் இப்போது அம்பலத்துக்கு வந்தாகிவிட்டது. இந்த நிலையில் கனேடியப் பொலீசாரின் அடுத்த குறி என்ன என்பது தொடர்பாகத்தான் கனேடிய புலித் தமிழர் தலையைப் போட்டு பிய்த்துக் கொள்கின்றனர்.




இது ஒன்றும் பெரிய புதிரல்ல. சாதாரணமாக யாரைக் கேட்டாலும் சொல்லி விடுவார்கள். கஸ்டப்பட்டு உளைக்கம் மக்களின் பணத்தை கட்டுக்கட்டாக கப்பமாக அறவிட்டால் அதை கள்ளமாகத்தான் பதுக்கி வைக்க வேண்டும். ஆனால் கனடா மண்ணில் சதாரணமாக யாருமே நூறு டொலர் அல்லது மிஞ்சி மிஞ்சிப் போனால் இருநூறு டொலர்களுக்கு மேல் பணமாக கையில் வைத்திருப்பது கிடையாது. அப்படியிருக்க இந்த புலிப்பினாமிகள் கட்டுக்கட்டாக பணத்தை எங்கே ஒளித்து வைத்திருப்பது?

எங்கோ ஒரு இடத்தில் அவை கணக்கு காட்டப்படத்தான் வேண்டும். கணக்கு காட்டாமல் வைத்திருந்தால் அது கறுப்புப் பணம். அதை கழுவி வெள்ளைப் பணமாக்குவதற்கு புலிகள் என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்? அந்த திருகுதாள விளையாட்டில் அவர்களோடு சேர்ந்து பணியாற்றுபவர்கள் யார்? என்பதுதான் கனேடியப் பொலீசாரின் அடுத்த குறியாகும். அந்த வகையில் புலிகள் சேர்த்த கப்பத்தை முதலீடாக வைத்து ரொறன்ரொ முதல் மொன்றியல், ஒட்டாவா, வான்கூவர் என கனேடிய மாநிலங்கள் பலவற்றில் தமிழர்கள் வைத்திருக்கும் வியாபார நிலையங்கள் மீதே RCMP யின் கடந்த இரு வருடங்களாக தகவல்களைத் திரட்டி வருவதுடன் அதில் தொடர்புபட்டுள்ள முக்கிய நபர்களையும் கண்காணித்து வருகின்றனர்.

ரொறன்ரோவில் புலிகளின் முதலீட்டில் நடத்தும் பல வியாபார நிலையங்கள் என வெளிப்படையாக தெரிந்த இடங்கள் சில இருக்கின்றன. ஆனால் வெளியே தெரியாமல் வேறு தனிப்பட்டவர்களின் பெயர்களில் நடத்தப்படும் வியாபார நிலையங்கள் தொடர்பாகத்தான் கனேடியப் பொலீசார் கண் வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது. அவ்வாறான இடங்களில் தொழில் செய்வதற்கென்று இலங்கையில் இருந்து அண்மையில் புலிகால் அனுப்பி வைக்கப்பட்ட பலர் வந்திருக்கின்றனர்.


ஏற்கனவே இங்கு புலிகளுக்காக முக்கிய பங்காற்றியவர்கள் பலர் கைது செய்யப்படாமல் இருப்பதற்காக படிப்படியாக கனடாவை விட்டு வேறு நாடுகளுக்கு குடும்பமாக அனுப்பிவைக்கப் படுகின்றனர். அவர்களில் சிலர், 'பிள்ளைகள் வளருகிறது நாங்கள் இந்தியாவில் அல்லது சிங்கப்பூரில் போய் செட்டில் ஆகப் போகிறோம்' என்று கதை விட்டபடி கிளம்பிப்போய்க் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்குப் பதிலாக புதிய நபர்கள் கொண்டு வந்து இறக்கப்படுகின்றனர்.

கனடாவில் புலிகளின் இரகசிய உள் வட்டம் ஒன்று முன்னர் இருந்தே இயங்கி வருகிறது. அது தொடர்பான தகவல் அறிந்தவர்கள் அதனோடு நெருக்கமாக பணியாற்றி பண முதலீடு செய்து பாரிய அளவில் வியாபாரம் செய்தவர்கள் போன்ற விபரங்கள் கனேடிய பொலீசாரின் விசாரணைகளின் போது வெளிவராமல் இருப்பதற்காகவே பல நபர்கள் கனடாவை விட்டு வெளியே அனுப்பப்படுகின்றனர் என்று நம்பப்படுகின்றது.

ஏற்கனவே புலிகளுக்காக பணம் சேர்த்து திரிந்தவர்கள், சேர்த்த பணத்தில் ஒரு பகுதியை சுத்தி வீடு வாங்கியவர்கள், வியாபாரம் துவங்கியவர்கள் எல்லாரையும் தற்போது புலிகள் அணுகி வருகின்றனர். போலீசார் விசாரித்தால் தம்மைப்பற்றி எதுவும் கூறவேண்டாம் என கேட்டுக்கொள்கின்றனர். ஆனால் புலிகளின் பணத்தில் வீடு வாங்கியவர்கள், பிஸினஸ் ஆரம்பித்தவர்கள் தமக்கு அந்தப் பணம் வந்தது எவ்வாறு என்பது தொடர்பாக பொலீசாரிடம் விளக்கம் கூறியே ஆகவேண்டும். ஒன்றில் அவர்கள் புலிகளை காப்பாற்றுவதற்காக தாங்கள் கம்பி எண்ண வேண்டும். அல்லது கனேடிய பொலீசாருக்கு அப்ரூவராக மாறி புலிகளை மாட்டிவிட வேண்டும். நடக்கப் போகும் கூத்தை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான். ■

- தில்லைநாதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்மா
வாழ்க்கையின் வலிமை தந்தவளே
சாவின் மேன்மை உயர்ந்தபோதெல்லாம்
வாழ்வின் வலிமையை தந்தவளே!

யாரம்மா நீ
என்னையா நீ பெற்றாய்?

தாய்மைக்கேங்கி
தரணிபோற்றும் தாயாகி
பெற்றதும் மற்றதும் பிள்ளைகளப்பா
"எல்லாரையும் காப்பாற்று அப்பனே"
என்று வேண்டுகிறாயே

யாரம்மா நீ
என்னையா நீ பெற்றாய்?

ஊர் வம்பளந்தாலும்
யாருக்கும் உலைவைக்காது
தூற்றியிருந்தாலும் - யாரும்
அழிந்துபோக எண்ணாது
மற்றவர் உன்னை வசைபாடும் போதும்
"எங்கிருந்தாலும் நல்லாயிருக்கட்டும்"
என்பாயே!

யாரம்மா நீ
என்னையா நீ பெற்றாய்?

பெற்ற பிள்ளை
காதலித்து கலங்கி நிற்கையிலே
"சாதி என்னடா சாதி
எல்லாரும் மனிசர்தான் செய்து வைப்பம்"
என்றாயே!

யாரம்மா நீ
என்னையா நீ பெற்றாய்?

வாழ்ந்தனுபவித்து
சாவின் வருகைக்காய் காத்துக்கிடக்கிறாய்
நான் கவிதை செய்கிறேன் - நீ
அடிக்கடி என்னை உன் கண்களால்
ஒற்றிக்கொள்கிறாய்
பிரிவின் வலியிலும்
"பெருமை"யின் வலிமையை ஓதுகிறாய்

யாரம்மா நீ
என்னையா நீ பெற்றாய்?
நின்னை நான் பெற்றது பேரானந்தம் தாயே

அன்பு பாசம் கனிவு கொண்டவளே
ரத்தமும் சதையும் என்புமாய் வாழ்ந்தவளே
வாழ உணர்த்தியவளே
இப்பொழுதே உன்னை கட்டியணைத்து
கதறியழவேண்டும்


யாரம்மா நான்?
நானே பெற்றேன்
வாழ்க்கையின் சந்தடிக்குள்ளும்
பிஞ்சுவிரல்களால்
தளர்ந்த என் கைகளைப்பற்றி
அழைத்துச் செல்கிறாள் - உன்பேத்தி.


- தாயுமானவர் -

02.04.2008. மு.ப. 3:27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவுகள்




கி

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வெளிந்துவிட்டன. 18 வருடங்களாக யுத்தம் காரணமாக நடத்தப்படாமல் இருந்து, நடத்தப்பட்ட தேர்தல் என்ற வகையில் இது கிழக்கு மாகாண மக்களுக்கு மட்டுமல்ல நாடடின் மொத்த அரசியலுக்கும் ஒரு முக்கியமான தேர்தலாகும். பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தாலும் கிழக்கு மாகாணத்தின் வெற்றியை அரசாங்கத்துடன் இணைந்த கூட்டமைப்பானது தனதாக்கிக் கொண்டுள்ளது.

வழமையாகவே கிழக்கில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி பாரிய வெற்றிகளை ஈட்டுவதில்லை. அந்த வகையில் இந்த முறை கிழக்கில் அதன் வெற்றிக்கு பிரதானமாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அடித்தளம் இட்டுக் கொடுத்துள்ளனர். மற்றும் பேரியல் அஸ்ரப், அதாவுல்லா, முஸ்லிம் காங்கிரசை விட்டுப் பிரிந்து அரசுடன் இணைந்த ஹிஸ்புல்லா, அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான தூணாக இருந்து பிரிந்து அரசாங்கத்துடன் சேர்ந்த பீ. தயாரத்தின ஆகியோரின் பங்களிப்பு அரசிற்கு பெரும் உதவியாக இருந்துள்ளது என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

ரவுப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லீம் காங்கிரஸ் இறுதி நேரத்தில் தமிழ் முஸ்லீம் மக்களின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய வகையில் இனவாதம் பேச முற்பட்டதுடன் ஐக்கிய தேசியக் கடசியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு தோல்வி கண்டுள்ளது. கிழக்கில் ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டு வெற்றி பெற்றிருந்தால் அதுவே மீண்டும் வன்னிப் புலிகள் கிழக்கில் காலூன்ற வழி சமைத்திருக்கும். அதைத்தான் புலிகள் மற்றும் தமிழர் கூட்டமைப்பு என்பன எதிபார்த்தன.

கிழக்கு மாகாண மக்கள் மீண்டும் யுத்த சூழலுக்குள் செல்லத் தாம் தயாரில்லை என்பதை இந்தத் தோதல் முடிவுகள் மூலம் தெட்டத் தெளிவாக கூறியுள்ளனர்.

கிழக்கு மாகாணத் தேர்தல் முறைகேடுகள் நிறைந்தது எனக் கூக்குரல் இடுவோர் எவருமே திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியால் வெல்ல முடிந்தது என்பதற்கு காரணம் கூறுவதில்லை. தோதல்களில் முறைகேடுகள் நிகழ்ந்திருந்தாலும் பெரும்பான்மையான வாக்குகள் மக்கள் நேர்மையாக போட்ட வாக்குகளே.

கிழக்கில் முஸ்லிம் மக்கள் மிக நெருக்கமாக பெரும்பான்மையாக வாழும் இடங்களில் முஸ்லிம் வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். கிழக்கில் முஸலிம் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என முஸ்லிம்கள் விரும்புவதிலும் தவறேதும் இல்லை. அந்த மக்களைப் பொறுத்தவரை கிழக்கில்தான் அவர்களால் அந்தக் கோரிக்கையை வைக்க முடியம்.

ஆனால் தற்போது கிழக்கில் உள்ள சூழ் நிலையில் அங்கு வன்னிப் புலிகளுக்கு எதிராக அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக கடும் நடவடிக்கை எடுக்கக்கூடிய தமிழர் ஒருவரே முதலமைச்சராக வருவது பொருத்தமானதாக இருக்கும். ஆனால் அந்தப் பொறுப்பை எடுப்பவர் பிள்ளையானாக இருந்தால் அவர் அந்த மாகாணத்தின் முஸ்லிம் மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நடந்து கொள்ளுவதை தன் தலையாய கடமையாக கொள்ளல் வேண்டும்.

- **ஆர்** -

எதிரொலி

தொடர்புகட்கு : ethiroli2007@yahoo.com

தனிச்சுற்றுக்கு மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org